Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 56 | உள்ளூர் - 25.02.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 54 | * Issue 56 | வெளியூர் - 26.02.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

நிதி நெருக்கடியை தவிர்க்க வேண்டுமா..?

இஸ்ரேலில் பிரதமர்!! குமரியில் முதல்வர் அதிரடி அறிவிப்புகள்!

விஜய் பிளான் தோல்வி..! பின்னடைவில் தவெக..!!

திமுக - காங்கிரஸ் இழுபறி? தவெகவுடன் கூட்டணியா!

## இந்தியா- இஸ்ரேல் இடையே வலுவான உறவு; பிரதமர் மோடி மகிழ்ச்சி!



புதுடில்லி, பிப். 25–

இஸ்ரேல் பயணம் குறித்து பிரதமர்மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: எனது அன்பு நண்பர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அழைப்பின் பேரில், இரண்டு நாட்களுக்கு இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொள்கிறேன். இந்தியாவும் இஸ்ரேலும் ஒரு வலுவான உறவைக் கொண்டுள்ளது. இது சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் சுறுசுறுப்பைக் கண்டுள்ளது. பிரதமர் நெதன்யாகுவுடன் எனது கலந்துரையாடல்களை எதிர்நோக்குகிறேன். இஸ்ரேல் பார்லிமென்டில் உரையாற்றும் முதல் இந்தியப் பிரதமராகும் பெருமை எனக்குக் கிடைக்கும். நீண்ட காலமாக இந்தியா–இஸ்ரேல் நட்பை வளர்த்து வரும் இந்திய புலம்பெயர்ந்தோருடன் தொடர்புகொள்வதை நான் எதிர்நோக்குகிறேன். எனது இஸ்ரேல் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில், 632 கோடியே 35 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவிலான 1,217 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 294 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,237 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன், மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், எஸ்.ராஜேஷ்குமார், தாரகை கத்பர்ட், மாநகராட்சி மேயர் மகேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகுமீனா, மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹெலன்டேவிட்சன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆஸ்டின், புஷ்பலீலா, மீனவர் நல வாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## குமரி மாவட்டத்தில் 6 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார் முதலமைச்சர்!




நாகர்கோவில், பிப். 25–

கன்னியாகுமரியில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அவர் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் பேசிய மு.க.ஸ்டாலின் 6 முக்கிய புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

1) கன்னியாகுமரியில் ரூ.28.20 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

2) ஏவிஎம் கால்வாய் ரூ.1.20 கோடி மதிப்பில் புனரமைக்கப்படும்.

3) கன்னியாகுமரியில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் புதிதாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

4) வளையாற்றில் இருந்து கன்னியாகுமரிக்கு நகராட்சிக்கு குடிநீர் வழங்க புதிய திட்டம்

5) முளகுமூடு தேவாலயம் ரூ.2 கோடி மதிப்பில் பழமை மாறாமல் புனரமைக்கப்படும்.

6) களியக்காவிளை கன்னியாகுமரி சாலை ரூ.9 கோடி மதிப்பில் அகலப்படுத்தப்படும்.

இவ்வாறு கூறினார்.

## 20 ஆயிரம் பேருக்கு பணி வாய்ப்பு? சென்னையில் வரும் 28-ந்தேதி பிரமாண்ட வேலைவாய்ப்பு முகாம்...!

சென்னை, பிப். 25–

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பை பெருக்கும் வகையில், வேலை இல்லாமல்தவிக்கும்இளைஞர்களுக்காக தமிழக அரசு சார்பில் தனியார் நிறுவனங்களில்ல பணி வாய்ப்பு கிடைக்கும் வகையில், அவ்வப்போது வேலைவாய்ப்பு வாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது இந்த நிலையில், வரும் 28ந்தேதி சென்னை சைதாப்பேட்டையில் பிரமாண்டமான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இதில், 20ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மூலம் 28.02.2026 அன்று மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சென்னை மாவட்ட ஆட்சியர் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 28.02.2026 அன்று சென்னை–15, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக வளாகத்தில் காலை 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை நடத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த வேலைவாய்ப்பு முகாமில் 200–க்கும் மேற்பட்ட முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 20000–க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். இம்முகாமில் 8–ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் +2 தேர்ச்சி. பட்டதாரிகள். பட்டயப்படிப்பு படித்தவர்கள். ஐ.டி.ஐ. தொழில் கல்வி பெற்றவர்கள். பொறியியல் பட்டம், கணினி இயக்குபவர்கள். தையல் கற்றவர்கள் என அனைத்து வித தகுதியுள்ள நபர்கள் கலந்து கொள்ளலாம்,

**வேலைவாய்ப்பு முகாம்**


இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசம். இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு மாவட்ட தொழில் மையத்தின் தொழில்முனை வோர்களுக்கான ஆலோசனைகள், மாவட்ட முன்னோடி வங்கியின் வாயிலாக வங்கி கடன் வழிகாட்டு தல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளது. கலந்து கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு பயனடையுமாறு தனியார்துறையில் சென்னை பணியமர்த்தப்படும் நபர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் இரத்து செய்யப்படமாட்டாது. மேலும், இம்முகாமில் கலந்துக்கொள்ள விருப்பம் உள்ள இளைஞர்கள் சென்னை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி , https://forms.gle/x48Nu8uZAj3qF8Pc7 என்ற Google Link–லோ தங்களது விவரங்களை பதிவு செய்துக் கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக்கொண்டுள்ளார்.

## தேசிய சொத்து பணமாக்கல் திட்டம்:

# மெகா NMP 2.0 பிளான்..! ரூ.16.72 லட்சம் கோடி சொத்துக்கள் டார்கெட்..

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்




புதுடெல்லி, பிப். 25–

அமைச்சர் நிர்மலா சீதாராமன் தேசிய சொத்து பணமாக்கல் திட்டம் 2.0 (National Monetisation Pipeline 2.0) என்ற புதிய திட்டத்தை அறிவித்தார். 2025 ஏப்ரல் முதல் ஐந்து ஆண்டுகளில் (2025–2030) அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் சொத்துக்களை பணமாக்குவதன் மூலம் 16.72 லட்சம் கோடி ரூபாய் நிதி திரட்டுவது தான் இத்திட்டத்தின் இலக்கு. நிதி ஆயோக் (NITI Aayog) உருவாக்கிய இத்திட்டம் கடந்த ஆண்டு யூனியன் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 'சொத்து பணமாக்கல் திட்டம் 2025–30' அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. முந்தைய திட்டத்தில் ரூ.10 லட்சம் கோடி என்ற இலக்கு இருந்த நிலையில், இப்போது இது ரூ.16.72 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் தனியார் முதலீடு ரூ.5.8 லட்சம் கோடியாக இருக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது

**சொத்து பணமாக்கல் திட்டம் 2.0 என்றால் என்ன?**

சொத்து பணமாக்கல் திட்டம் என்பது பயன்படுத்தப்படாத அல்லது முழுமையாக பயன்படுத்தப்படாத மத்திய அரசுக்கு சொந்தமான உள்கட்டமைப்பு சொத்துக்களை தற்காலிகமாக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி, பணம் ஈட்டும் முறை. இதில் சொத்து விற்பனை, பங்கு விற்பனை, குத்தகை, பணப்புழக்க பத்திரங்கள் (securitisation), அல்லது ஏலம் போன்ற வழிகளில் இந்த முதலீட்டை திரட்டப்பட உள்ளன. முதல் கட்டம் 2021இல் தொடங்கியது, இப்போது இரண்டாம் கட்டம் 2025–26 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு நடைபெறும். இத்திட்டம் அரசின் நிதி பற்றாக்குறையை குறைக்கவும், உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு நிதி திரட்டவும் உதவும்.

**ரூ.16.72 லட்சம் கோடி இலக்கு எப்படி எட்டப்படும்?:**

இந்த இலக்கில் பெரும்பகுதி சாலை, துறைமுகம், ரயில்வே, மின்சாரம், நிலக்கரி, சுரங்கம் போன்ற துறைகளில் இருந்து நிதி திரட்டப்படும். குறிப்பாக 21,300 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள், 15 மல்டி–மோடல் லாஜிஸ்டிக்ஸ் பார்க்குகள், 6 ரோப் வேகள் ஆகியவற்றை பணமாக்குவதன் மூலம் ரூ.4.42 லட்சம் கோடி திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மின்சாரம் ரூ.2.77 லட்சம் கோடி, துறைமுகங்கள் ரூ.2.64 லட்சம் கோடி, ரயில்வே ரூ.2.62 லட்சம் கோடி, நிலக்கரி ரூ.2.16 லட்சம் கோடி, சுரங்கங்கள் ரூ.1 லட்சம் கோடி, நகர்ப்புற உள்கட்டமைப்பு ரூ.52,000 கோடி, விமான நிலையங்கள் ரூ.27,500 கோடி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ரூ.16,300 கோடி, கிடங்கு மற்றும் சேமிப்பு ரூ.10,000 கோடி, டெலிகாம் ரூ.4,800 கோடி, சுற்றுலா ரூ.1,200 கோடி தொகை மற்ற துறைகளில் இருந்து திரட்டப்பட உள்ளன.

**முக்கிய திட்டங்கள் :**

இத்திட்டத்தில் GAIL Gas நிறுவனத்தில் சிறிய அளவிலான பங்குகளை பங்குச்சந்தையில் பட்டியலிடுதல், விமான நிலைய ஆணையத்தின் துணை நிறுவனத்தில் பங்குகளை விற்பனை செய்வது, நான்கு கூட்டு முயற்சி விமான நிலையங்களில் பங்கு விற்பனை, முக்கிய துறைமுகங்களின் நிலப்பரப்புகள் மற்றும் உணவு கழகத்தின் நிலங்களை பொது–தனியார் கூட்டுறவு (PPP) மாதிரியில் மேம்படுத்துதல், 94 நிலக்கரி சுரங்கங்களை ஏலம் விடுதல், BSNL–இன் 38 நிலங்களை நீண்டகால குத்தகைக்கு விடுதல் போன்றவை அடங்கும்.

## ஐநா சபையில் உக்ரைன் தீர்மானத்தில் இந்தியா விலகல்: 107 நாடுகள் ஆதரவு!



நியூயார்க், பிப். 25–

ஐநா சபையில் உக்ரைன் – ரஷ்யா போர் குறித்து கொண்டுவரப்பட்ட உடனடி போர்நிறுத்த தீர்மான வாக்கெடுப்பில் இருந்து இந்தியா விலகியது. 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள நிலையில் 107 நாடுகள் ஆதரவு தெரிவித்தது, 12 நாடுகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் 51 வாக்கெடுப்பில் இருந்து விலகியுள்ளது. போர் நிறுத்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி நன்றி தெரிவித்தார். ரஷ்யா உக்ரைன் இடையிலான போர் 5ம் ஆண்டை எட்டியுள்ளது. இரு நாடுகளுக்கு இடையே நடக்கும் இந்த சண்டையில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்தனர். இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர, அமெரிக்கா முன்னிலையில் இருநாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. எனவே, போர் நிறுத்தம் செய்வதற்காக உலக நாடுகளின் ஆதரவை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி திரட்டி வருகிறார். இந்த சூழலில், ரஷ்யா – உக்ரைன் இடையிலான போரை உடனடியாக நிறுத்துவதற்கு அழைப்பு விடுத்து, ஐநா சபையில் வரைவு தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், டென்மார்க், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, பிலிப்பைன்ஸ், போலாந்து உள்பட 107 நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 25.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 13-ம் தேதி

# ரூ.5000 Vs ரூ.10,000; சபாஷ் சரியான போட்டி!!



தமிழ்நாட்டில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தல் ஆணையம் இதற்கான ஆயத்த பணிகளை மேற்கொண்டு வரும் நிலையில் அரசியல் கட்சிகளும் கூட்டணி பேச்சு, தொகுதி பங்கீடு, தேர்தல் வாக்குறுதி வெளியீடு என பரபரப்பாக செயல்பட்டு வருகின்றன. தேர்தலில் மக்களின் வாக்குகளை கவர்வதற்காக அரசியல் கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன.

தற்போது தேர்தல் களத்தில் திமுக கூட்டணிக்கும், அதிமுக கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவில் வரக்கூடிய சூழலில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தங்களுடைய தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டு இருக்கிறார். மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு தேர்தலுக்கான அதிமுகவின் மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டார். இதன்படி அதிமுக ஆட்சி அமைந்ததும் மக்களின் சுமையை போக்க ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10,000 ரூபாய் கருணைத்தொகை வழங்கப்படும் என தெரிவித்தார். சொத்து வரி உயர்வு, மின் கட்டண உயர்வு என திமுக ஆட்சியில் மக்களுக்கு நிதிச்சுமை அதிகரித்திருப்பதால் ஒருமுறை கருணை தொகையாக 10,000 ரூபாய் அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்படும் என கூறினார்.

மேலும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 2000 ரூபாய் வழங்கப்படும் என்றும் பனிரெண்டாம் வகுப்பு வரை முடித்து வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கப்படும் என்றும் கூறினார்.அதாவது வேலையில்லா இளைஞர்களுக்கு மாதம் தோறும் நிதியுதவி வழங்கப்படும் என கூறியுள்ளார். இது தவிர பொங்கல் பரிசு தொகுப்போடு இனி ஒவ்வொரு ஆண்டும் 1000 ரூபாய் வழங்கப்படும் என கூறினார்

மேலும் மீன்பிடி தடைகாலத்தில் மீனவர்களுக்கு உதவி தொகை 8000 ரூபாயாக இருந்து 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என தெரிவித்த அவர் நகரப் பகுதிகளில் நடைபாதை மற்றும் சிறு வியாபாரிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்கள் ரத்து செய்யப்படும் என்றார். கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட் ஆக உயர்த்தப்படும் விசைத்தறி நெசவாளர்களுக்கு 1000 யூனிட் இலவச மின்சாரம் 1400 யூனிட் ஆக உயர்த்தி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார். ஏற்கனவே அதிமுக சார்பாக இரண்டு கட்டங்களாக வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி குலவிளக்கு என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டு அதன் மூலம் பெண்களுக்கு மாதம் 2000 ரூபாய் அவர்களுடைய வங்கி கணக்கிலேயே நேரடியாக வரவு வைக்கப்படும் என அவர் அறிவித்திருந்தார்.

ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து சேவை கொண்டு வரப்படும் என கூறினார். வங்கிகளில் பெற்ற கல்வி கடன்கள் ரத்து செய்யப்படும், முதியோர் உதவி தொகை 2000 ரூபாயாக உயர்த்தப்படும் என ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளார். திமுக சார்பாக ஏற்கனவே 5000 ரூபாய் மகளிர் உரிமை தொகை, 3000 ரூபாய் பொங்கல் பரிசு ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. தற்போது போட்டியாக அதிமுக 10000 ரூபாய் கருணை தொகை அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எனவே இந்த தேர்தலில் மக்கள் வாக்குகளை பெறுவதில் 5000 ரூபாய் மகளிர் உரிமை தொகைக்கும் 10000 ரூபாய் கருணை தொகைக்கும் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முன்னாள் முதலமைச்சர் பிறந்தநாள் விழா!



திருப்பூர், பிப். 25–

அதிமுக திருப்பூர் மாநகர் மாவட்ட சிறு பூலுவபட்டி அம்மா பேரவை பகுதி செயலாளர் 25 K பழனிச்சாமி தலைமையில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு சேலை மற்றும் தட்டு வழங்கினர் மேலும் அனைவருக்கும் கழக தேர்தல் வாக்குறுதி நோட்டீஸ் வழங்கப்பட்டது இங்கு நிகழ்வில் பேரவை நிர்வாகிகள்கழக நிர்வாகிகள் & 416 பூத். சொந்தர்.குமார். கோவிந்தராஜ்.ரவி. மூர்த்தி. கண்ணன். சோமு. பாலசுப்பிரமணியம். மனோகர். பிரபாகரன். சூர்யா.சித்ரா ஏராளமான கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்...

# அப்போலோ டயக்னாஸ்டிக்ஸ்: வரிச் சேமிப்பு, ஆரோக்கியக் காப்பும் இரட்டை நன்மை!

சென்னை, பிப் 25–

சென்னை அப்போலோ டயக்னாஸ்டிக்ஸ், வரி தாக்கல் காலத்தை முன்னிட்டு "டாக்ஸ் சேவர்" ஆரோக்கியத் தொகுப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. நிதி திட்டமிடல் உடல்நல பாதுகாப்பு ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம், தொழில்முறை பணியாளர்களுக்கு வரி சேமிப்பையும் தடுப்பு சுகாதார பரிசோதனைகளையும் ஒரே நேரத்தில் பெறும் வாய்ப்பை வழங்குகிறது.

இந்தத் தொகுப்பில் நீரிழிவு, சிறுநீரக செயல்பாடு, கல்லீரல் ஆரோக்கியம், எலும்பு வலிமை, ஹார்மோன் சுயவிவரம் உள்ளிட்ட 75 அத்தியாவசிய பரிசோதனைகள் அடங்குகின்றன. ரூ. 4,250 மதிப்புள்ள இந்தப் பரிசோதனை தொகுப்பு ரூ. 2,500 சலுகை விலையில் வழங்கப்படுகிறது. வருமான வரி சட்டத்தின் பிரிவு 80டி கீழ் தகுதியானவர்கள் ரூ. 5,000 வரை வரிச்சலுகை பெறலாம். தேசிய தொழில்நுட்ப தலைவர் மற்றும் முதன்மை நோயியல் நிபுணர் டாக்டர் ராஜேஷ் பிந்த்ரே, இதய நோய் மற்றும் நீண்டகால சிறுநீரக கோளாறுகள் போன்ற வாழ்க்கை முறை நோய்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிதல் மிக முக்கியம் என வலியுறுத்தினார்.

நாடு முழுவதும் 5,000க்கும் மேற்பட்ட மையங்கள் வழியாக, இணைய பதிவு அல்லது நேரடி முன்பதிவு மூலம் இந்தத் தொகுப்பை பெறலாம். வீட்டு மாதிரி சேகரிப்பு வசதி மற்றும் ஆரோக்கிய முன்னேற்றத்தை கண்காணிக்கும் ஸ்மார்ட் அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. சென்னை அமைந்துள்ள டிஜி–ஸ்மார்ட் மத்திய குறிப்பு ஆய்வகம் துல்லியமான மற்றும் விரைவான பரிசோதனை சேவையை உறுதி செய்கிறது.

# ஏர்டெல் பேமெண்ட்ஸ் பேங்க்: ரூபே ஆன்-தி-கோ கார்டுக்கு இன்ஸ்டன்ட் NFC பேலன்ஸ் அப்டேட் வசதி!

சென்னை , பிப். 25–

ஏர்டெல் பேமெண்ட்ஸ் பேங்க் அதன் ரூபே (RuPay) ஆன்–தி–கோ கார்டுகளுக்கான இன்ஸ்டன்ட் NFC அடிப்படையிலான பேலன்ஸ் அப்டேட் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி NCMC (National Common Mobility Card) ஆதரவு உடன் செயல்பட்டு, வாடிக்கையாளர்கள் NFC செயல்படுத்தப்பட்ட ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் கார்டை ஒருமுறை தட்டுவதன் மூலம் எங்கிருந்தும், எப்போது வேண்டுமானாலும் தங்கள் கார்டின் பேலன்ஸை உடனடியாக சரிபார்க்க அல்லது அப்டேட் செய்ய முடியும்.

இந்த அம்சம் பயணிகளுக்கு மெட்ரோ நிலைய கியோஸ்க்குகளுக்கு சென்று நேரம் வீணாகும் சிரமத்தை நீக்கி, முழுமையான டிஜிட்டல் மற்றும் காண்டாக்ட் லெஸ் போக்குவரத்து அனுபவத்தை வழங்குகிறது. ஏர்டெல் பேமெண்ட்ஸ் பேங்க் இந்த வசதியை சில மாதங்களுக்கு முன்பு பரிசோதனை செய்ய தொடங்கி, வாடிக்கையாளர்களிடமிருந்து நேர்மறையான கருத்துக்களைப் பெற்றது. இதன் பேரில், இப்போது அனைத்து RuPay ஆன்–தி–கோ கார்டு பயனர்களுக்கும் இந்த வசதியை விரிவாக வழங்கியுள்ளது.

ஏர்டெல் பேமெண்ட்ஸ் பேங்க் நிர்வாக இயக்குனர் பிஸ்னஸ் ஆபரேஷன்ஸ் திரு. கணேஷ் அனந்தநாராயணன் கூறியதாவது, இந்த வசதி பயணிகளின் சௌகரியத்தை மேம்படுத்தி, இந்தியாவின் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மற்றும் போக்குவரத்து சூழலை வலுப்படுத்தும் முக்கிய முயற்சியாக இருக்கும்.

இதுவரை 5 மில்லியனுக்கும் அதிகமான RuPay ஆன்–தி–கோ கார்டுகள் வழங்கப்பட்டு ள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டானியா ஜிம் ஜாம் மார்வெல் புதிய ரெஞ்சை அறிமுகம்!

பாண்டிச்சேரி , பிப். 25–

பிரிட்டானியா ஜிம் ஜாம் மார்வெல் ரசிகர்களுக்காக புதிய ரெஞ்சை அறிமுகப்படுத்துகிறது! கேப்டன் அமெரிக்கா, தோர், அயன் மேன், டெட்பூல் மற்றும் வோல்வரின் ஆகிய சூப்பர் ஹீரோக்கள் கிராபிக்ஸ் மற்றும் கண்ணைக் கவரும் காட்சிகளுடன் ஒவ்வொரு பேக்கிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது சிற்றுண்டியை ஒரே கையில் எளிதாக அனுபவிக்கச் செய்யும் முக்கிய கருத்தை வலியுறுத்துகிறது.





புதிய விளம்பரத்தில் ஐந்து மார்வெல் காஸ்பிளேயர்கள் ஒரு கற்பனையான சூப்பர் ஹீரோ பத்திரிகையாளர் சந்திப்பில், ஜிம்மி மற்றும் ஜாம்பி யிடமிருந்து வரும் நகைச்சுவையான கேள்விகள் சூப்பர் ஹீரோக்களுக்கு கூட சிற்றுண்டி சாப்பிட நேரம் அரிதாக இருப்பது வெளிப்படுத்துகின்றனர். இது பிரிட்டானியா ஜிம் ஜாமீன் மையக் கருத்தை விளக்குகிறது ஒரு கையால் எளிதாக சாப்பிட கூடாத சிறந்த சிற்றுண்டி.

"நோ–ட்விஸ்ட் சவால்" வாயிலாக ரசிகர்கள் ஸ்பெஷல் எடிஷன் பேக்குகளை ஸ்கேன் செய்து, விரும்பிய சூப்பர் ஹீரோக்களின் காலணிகளில் நுழைந்து இன்டராக்டிவ் கேம்களில் கலந்து, ஜிம் ஜாம் அனுபவிக்கலாம். விளையாட்டின் மூலம் ஜிம் ஜாம் காயின்களை வெல்லவும், மார்வெல் பொருட்கள் அல்லது ஹாங்காங் டிஸ்னிலேண்ட் பயணத்தைப் பெறவும் வாய்ப்பு உள்ளது.

# ஐஐஎஃப்எல் ஃபைனான்ஸ் லிமிடெட் கடன்பத்திரங்கள் மூலம் ₹2,000 கோடி நிதி திரட்டுகிறது; ஆண்டுக்கு 9% வரை வட்டி வழங்கல்!

கோயம்புத்தூர், பிப். 25–

ஐஐஎஃப்எல் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் பாதுகாக்கப்பட்ட மாற்ற முடியாத கடன் பத்திரங்கள் (NCDs) பொது வெளியீட்டின் மூலம் மொத்தம் ₹2,000 கோடி வரை நிதி திரட்ட திட்டமிட்டுள்ளது.

ஆரம்ப கட்டமாக ₹500 கோடி இலக்குடன் தொடங்கப்படும் இந்த வெளியீடு, கிரீன்–ஷூ ஆப்ஷன் மூலம் கூடுதலாக ₹1,500 கோடி வரை உயர்த்தப்படும். ஆண்டுக்கு 9% வரை வட்டி வழங்கப்படும் இந்த NCDகள் 24, 36 மற்றும் 60 மாத கால வரையறைகளில் கிடைக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு CRISIL Ratings நிறுவனத்தால் CRISIL AA/Stable என்றும், Brickwork Ratings நிறுவனத்தால் BWR AA+/Stable என்றும் மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கடன்பத்திரமும் ₹1,000 முகமதிப்பில் வழங்கப்படுவதுடன், குறைந்தபட்ச முதலீடு ₹10,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த NCDகள் BSE Limited மற்றும் National Stock Exchange of India பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட்ட உள்ளன.

நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் Nirmal Jain கூறுகையில், "இந்த நிதி திரட்டல் எங்கள் நிதி ஆதாரங்களை மேலும் பலப்படுத்தி, வங்கிச் சேவைகள் சரியாகச் சென்றடையும் வாடிக்கையாளர்களுக்கு எளிதான கடன் வழங்க உதவும். கடன்பத்திரங்கள் மூலம் நிதி திரட்டுவதில், முதலீட்டாளர்களுக்கு உரிய நேரத்தில் அசல் மற்றும் வட்டி திருப்பித் தருவதில் ஐஐஎஃப்எல் பைனான்ஸ் வலுவான நம்பிக்கையைப் பெற்றுள்ளது," என்றார்.





# மைக்ரோசாஃப்ட் ஃபவுண்டரி மூலம் உருவாக்கப்பட்ட AI சர்ச் வசதியை அறிமுகப்படுத்திய ஃபோன்பே

சென்னை , பிப். 25–

ஃபோன்பே, பயனர்கள் இனி எளிய டெக்ஸ்ட் அல்லது குரல் கமாண்ட்களைப் பயன்படுத்தி தேடல், பணம் செலுத்தல் மற்றும் பரிவர்த்தனை விவரங்களை கண்காணிக்கக் கூடிய AI சார்ந்த இயல்பான மொழித் தேடல் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி பயனர்களை நேரடியாக அவர்களது நோக்கத்திற்கே அழைத்துச் செல்லும், உதாரணமாக "ஹேமந்துக்கு 20 ரூபாய் அனுப்பு" என்ற கேள்வி நேரடியாக பணம் செலுத்தும் பக்கத்தை திறக்கும். ஃபோன்பே நிறுவனர், முழுநேர இயக்குநர் மற்றும் CTO ராகுல் சாரி கூறுகையில், "பல ஆண்டுகளாக பேமெண்ட் செயலிகள் பரிவர்த்தனைகளுக்காகவே வடிவமைக்கப்பட்டன. இந்த அறிமுகம் பயனர்களுக்கு முன்னேறிய, அறிவார்ந்த அனுபவத்தை வழங்கும் முதல் படி. AI நம்மை பயனர்களின் தேவையை முன்கூட்டியே கணிக்க உதவுகிறது, மைக்ரோசாஃப்ட் உடனான எங்கள் கூட்டணியால் பேமண்ட் செய்யும் செயலியை மேலும் எளிதாக்க முடிகிறது."


மைக்ரோசாஃப்ட் இந்தியா மற்றும் தெற்காசியாவின் தலைவர் புனித் சந்தோக் கூறுகையில், "ஃபோன்பே புதிய AI அனுபவம், டிஜிட்டல் பேமண்ட்களை மக்களுக்கு எளிதாகவும், அணுகக்கூடியதாகவும் மாற்றும் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும். மைக்ரோசாஃப்ட் ஃபவுண்டரி, பாதுகாப்பான மற்றும் மனிதர்களை மையமாகக் கொண்ட தயாரிப்புகளை உருவாக்க உதவுகிறது, இது இந்தியாவின் டிஜிட்டல் பரிமாணத்தை மேலும் வலுப்படுத்தும்."

# பைன் லேப்ஸ் இந்தியாவின் 3 முன்னணி ஓஎம்சிகளின் டிஜிட்டல் பணப்பரிமாற்ற தள நவீனமய ஒப்பந்தத்தை வென்றது

சென்னை, பிப். 25–

உலகளாவிய நிதிநுட்ப நிறுவனமான பைன் லேப்ஸ், இந்தியாவின் முன்னணி எண்ணெய் மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனங்களான பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (பிபிசிஎல்), ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (எச்பிசிஎல்) மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஐஓசிஎல்) ஆகிய மூன்று ஓஎம்சிகளிடமிருந்து முக்கிய பல ஆண்டு டிஜிட்டல் பணப்பரிமாற்ற ஒப்பந்தங்களை வென்றுள்ளது. இந்த ஒப்பந்தங்களின் கீழ், இந்தியா முழுவதும் உள்ள பெட்ரோல் பங்குகள் மற்றும் வணிக விற்பனை மையங்களில் சுமார் 1.3 லட்சம் டிஜிட்டல் பணப்பரிமாற்ற சாதனங்களை நிறுவுதல், நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல் பொறுப்புகளை பைன் லேப்ஸ் மேற்கொள்கிறது. இதன் மூலம் விற்பனை மையங்களில் வேகமான, பாதுகாப்பான மற்றும் தடையற்ற பணப்பரிமாற்ற சேவைகள் வழங்கப்படும்.

பைன் லேப்ஸ் லிமிடெட்டின் சிஇஓ பி. அம்ரிஷ் ராவ் கூறியதாவது, "எங்களது தொழில்நுட்பத் திறனை இந்தியாவின் முன்னணி ஓஎம்சிகளின் பரந்த சில்லறை விற்பனைத் தடங்களுடன் இணைப்பதன் மூலம், தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வலுவான பணப்பரிமாற்றக் கட்டமைப்பையும், உலகத்தரம் வாய்ந்த முன்கூட்டியே பணம் செலுத்திய லாயல்டி ரிவார்ட்ஸ் சூழல் அமைப்பையும் நாங்கள் உருவாக்குகிறோம். எக்ஸ்ட்ராபவர் (XTRAPOWER) லாயல்டி ரிவார்ட்ஸ் தளத்தையும் நிர்வகித்து, இந்தியாவின் எரிபொருள் சில்லறை வர்த்தகத்தை விரைவாக டிஜிட்டல் மயமாக்குகிறோம்."



# நிதி நெருக்கடியை தவிர்க்க வேண்டுமா..? மறந்தும் கூட இந்த தவறுகளை பண்ணாதீங்க..!!





பொதுவாகவே மங்களகரமான நாள் என்று அழைக்கப்பட்டாலும், புதிய முயற்சிகளையும் சுப காரியங்களையும் தொடங்குவதற்கு மக்கள் தயங்கும் ஒரு நாளாக செவ்வாய்க்கிழமை இருந்து வருகிறது. செவ்வாய் கிரகம் வீரம் மற்றும் ஆக்ரோஷத்தின் அடையாளமாக கருதப்படுவதால், இந்த நாளில் சில செயல்களை செய்வது எதிர்மறையான விளைவுகளை தரும் என்பது ஐதீகம். அதே சமயம், வீரத்தின் அடையாளமான முருகப்பெருமானுக்கும், ராம பக்தன் அனுமனுக்கும் உரிய நாளாக இது போற்றப்படுகிறது.

இந்த நாளில் மனதாரப் பிரார்த்தனை செய்பவர்களுக்குத் தீய சக்திகள் விலகும் என்பதும், ராகு கால வேளையில் துர்க்கையை வழிபடுவதால் திருமணத் தடைகள் நீங்கும் என்பதும் பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. இருப்பினும், வாழ்க்கையில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைக்கச் செவ்வாய்க்கிழமையன்று செய்யக்கூடாத சில கட்டுப்பாடுகளை ஜோதிட வல்லுநர்கள் பட்டியலிடுகின்றனர்.

**ஆடை மற்றும் பொருட்களில் கவனம் :**

செவ்வாய்க்கிழமையன்று கருப்பு நிற ஆடைகளை அணிவதை தவிர்ப்பது நல்லது. செவ்வாய் கிரகத்திற்கு உகந்த சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிற ஆடைகளை அணிவது நேர்மறை ஆற்றலை ஈர்க்கும்; மாறாக கருப்பு நிறம் நிதி சார்ந்த சிக்கல்களை வரவழைக்கும் என கூறப்படுகிறது. அதேபோல், கத்தி, கத்தரிக்கோல் அல்லது ஊசி போன்ற கூர்மையான இரும்புப் பொருட்களை இந்த நாளில் வீட்டிற்குப் புதிதாக வாங்கக்கூடாது. அவ்வாறு வாங்குவது குடும்பத்தில் வீண் சண்டைகளையும், தேவையற்ற பண இழப்புகளையும் ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

**பொருளாதாரப் பரிமாற்றங்களும் முதலீடுகளும் :**

பண விஷயத்தில் செவ்வாய்க்கிழமை மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாளாகும். இந்த நாளில் யாருக்காவது கடன் கொடுப்பதோ அல்லது யாரிடமாவது கடன் வாங்குவதோ பெரும் போராட்டங்களை உருவாக்கும். அவ்வாறு பரிமாறப்படும் பணம் திரும்புவதில் சிக்கல்கள் ஏற்படும். மேலும், புதிய தொழில்களிலோ அல்லது பங்குகளிலோ முதலீடு செய்வதை செவ்வாயன்று தவிர்ப்பது நலம். இந்த நாளில் செய்யப்படும் முதலீடுகள் மங்களகரமானதாக கருதப்படுவதில்லை என்பதால், அவை பாதகமான முடிவுகளை தரக்கூடும்.

**உணவு மற்றும் பயண கட்டுப்பாடுகள் :**

செவ்வாய்க்கிழமையன்று மது மற்றும் அசைவ உணவுகளைத் தவிர்ப்பது அவசியம். இது நம் மனதை அமைதிப்படுத்துவதோடு துரதிர்ஷ்டங்களை தவிர்க்க உதவும். பயணங்களை பொறுத்தவரை, மேற்கு, வடக்கு அல்லது வடமேற்குத் திசைகளில் பயணிப்பதைத் தவிர்ப்பது நல்லது. ஒருவேளை தவிர்க்க முடியாத பயணமாக இருந்தால், வீட்டிலிருந்து கிளம்பும் போது சிறிதளவு வெல்லம் சாப்பிட்டுவிட்டு செல்வது தோஷங்களை குறைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நாளில் யாரிடமும் வீண் விவாதங்களிலோ அல்லது சண்டைகளிலோ ஈடுபடக்கூடாது. இந்த எளிமையான ஆன்மீக கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம், செவ்வாயின் அருளை முழுமையாகப் பெற்றுத் துன்பங்கள் இல்லாத வாழ்வைப் பெறலாம்.

# பழனி மாரியம்மன் திருவிழா பூச்சொரிதல் விழா!




பழனி, பிப். 25–

பழனி மாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு, பூச்சொரிதல் விழா நடைபெற்றது. பழனி மாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு, வருத்தமில்லா வாலிபர் சங்கம் சார்பில், பிப்ரவரி 25 ல் இரவு 9மணி அளவில் பூச்சொரிதல் விழா நடைபெற்றது. . இதில் கண்பத் கிரேண்ட் அதிபர் என் ஹரிஹரமுத்து, பழனி போலீஸ் டிஎஸ்பி தனஜெயன், போலீஸ் ஆய்வாளர் மணிமாறன், திமுக நகர செயலாளர் வேலுமணி, வருத்தமில்லா வாலிபர் சங்கம் நிர்வாக தலைவர் முருகானந்தம், நிர்வாகிகள் கவுன்சிலர் கே சுரேஷ், சிவி செல்வம், ஏ பழனிச்சாமி, வி ஏ பி குமார். விஸ்வ ஹிந்து பரிஷத் செந்தில் ஜி, பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, அரிமா சுந்தரம், சுவாமி விலாஸ் முருகேசன், காளீஸ்வரி, திருக்கோவில் முன்னாள் சூப்பிரெண்டு நெய்க்காரப்பட்டி முருகேசன், சரவணா ரியல் எஸ்டேட் விசுவநாதன், பொம்மை கடை மணி, கண்ணம்மாள் பழனிச்சாமி, முன்னாள் கவுன்சிலர் ப.இ.தண்டபாணி, மகாலிங்கம், டைமண்ட் சக்திவேல், கணேசன், கே. சுப்புராஜ், பி.ஜே.பி.நகரத் தலைவர் ஆனந்தகுமார், கொரியர் முரளிதரன், மணி, ஆர் டி கே தங்கராஜ், ஆகியோர் பங்கேற்றனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### இதய நோயாளிகளே..!! லேசர் ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை நல்லதல்ல..!!




மருத்துவத் துறையில் 'லேசர் சிகிச்சை' என்பது வலியற்ற மற்றும் நவீனமான ஒன்றாக பார்க்கப்பட்டாலும், இதய சிகிச்சை என்று வரும்போது அதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் இருப்பதாக இதய நோய் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். லேசர் முறையில் ஆஞ்சியோபிளாஸ்டி (Laser Angioplasty) செய்துகொண்டால் ஸ்டென்ட் வைக்க தேவையில்லை அல்லது அறுவை சிகிச்சை போன்ற தழும்புகள் இருக்காது என்று பொதுமக்கள் மத்தியில் ஒரு தவறான புரிதல் நிலவுகிறது. ஆனால், இது தோலில் செய்யப்படும் லேசர் சிகிச்சையை போன்றது அல்ல என்பதை புரிந்துகொள்வது அவசியம்.

உண்மையில், லேசர் ஆஞ்சியோபிளாஸ்டி என்பது இதயத்தின் ரத்த நாளங்களில் படிந்துள்ள கடினமான கால்சியம் படிவுகள் மற்றும் மென்மையான திசுக்கட்டிகளை அகற்றுவதற்காக, ஒரு சிறப்பு வாய்ந்த மெல்லிய குழாய் (Catheter) வழியாக புற ஊதா கதிர் துடிப்புகளை (Ultravi–olet Pulses) உள்ளே செலுத்தும் ஒரு தொழில்நுட்பமாகும். இந்த சிகிச்சையின் போதும், வழக்கமான ஆஞ்சியோபிளாஸ்டி முறையைப் போலவே பலூன் மற்றும் ஸ்டென்ட் (Stent) ஆகியவற்றைப் பயன்படுத்துவது அவசியமாகிறது. எனவே, இது மற்ற சிகிச்சைகளை விட மிக வேகமானதோ அல்லது முற்றிலும் வலியற்றதோ கிடையாது.

குறிப்பிட்ட சில மருத்துவச் சூழல்களில் மட்டுமே இந்த லேசர் முறை மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. குறிப்பாக, 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மாரடைப்பு ஏற்படும்போது, அவர்களின் ரத்த நாளங்களில் கொழுப்பு படிமானம் குறைவாகவும், ரத்தக் கட்டிகள் பெரியதாகவும் இருந்தால், அவற்றை லேசர் கதிர்கள் மூலம் கரைக்க இந்த முறை பெரிதும் உதவுகிறது. அதேபோல், ஏற்கனவே ஆஞ்சியோபிளாஸ்டி செய்துகொண்ட நோயாளிகளுக்கு, அந்த ஸ்டென்ட் வைக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் புதிய அடைப்புகள் ஏற்படும் போதும் லேசர் சிகிச்சை ஒரு சிறந்த மாற்றாக அமைகிறது. எனவே, அனைத்து விதமான இதய அடைப்புகளுக்கும் லேசர் முறையே சிறந்தது என்ற மாயையை தவிர்த்து, மருத்துவரின் ஆலோசனையின் பேரில் தகுந்த சிகிச்சையை தேர்ந்தெடுப்பதே சிறந்தது.



இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் சாயல்குடி பேரூராட்சியில் நடைபெற்று வரும் குடிநீர் குழாய் பதிப்பு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகளில் கடுமையான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக மக்கள் நல கூட்டமைப்பு சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.



## சினிமா துளிகள்..!

### எம். ஆர். ராதா மகள் என்பதை நிரூபித்திருக்கிறேன்: ராதிகா சரத்குமார்!



நடிகை ராதிகா சரத்குமார் தன் தந்தை எம். ஆர். ராதா குறித்து பேசியுள்ளார்.

நடிகர் சிவகார்த்திகேயன் தயாரிப்பில் உருவான தாய் கிழவி திரைப்படம் பிப். 27 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. நடிகை ராதிகா சரத்குமார் நடித்த இப்படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார்.

இதன் அறிமுக விழா சென்னையில் (பிப்.23) நடைபெற்றது. இதில், நடிகர்கள் சிவகார்த்திகேயன், சரத்குமார், சூரி உள்பட படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பேசிய நடிகை ராதிகா, "நான் சினிமாவிற்குள் நுழைந்தபோது என் தந்தையான எம். ஆர். ராதாவின் பெயரைச் சொல்லக்கூடாது என என்னை அவமானப்படுத்திய வர்கள் அதிகம். நான் என் அம்மாவிடம் அப்பா பெயரை என்னுடன் இணைக்க வேண்டாம் எனக் கூறினேன்.

இப்போது, தாய் கிழவி திரைப்படத்தில் பெண் எம். ஆர். ராதாவாகவே நடித்திருக்கிறேன். என்னை யாரென்று காட்டிவிட்டேன். பெருமையாகவும் தெனாவட்டாகவும் சொல்கிறேன், நான் எம். ஆர். ராதாவின் மகள் என நிரூபித்திருக்கிறேன்!" எனத் தெரிவித்துள்ளார்.

# விலங்குகள் நல காப்பகங்களை பராமரிக்க தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு! தமிழ்நாடு அரசு!!

சென்னை, பிப். 25–

வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டத்தின் கீழ் விலங்குகள் நல காப்பகங்களை பராமரிக்க தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு அரசு அழைப்பு விடுத்துள்ளது.




இதுதொடர்பாக தமிழ்நாடு விலங்குகள் நலவாரியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம், கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்த வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டத்தின் கீழ் கைவிடப்பட்டு மீட்கப்பட்ட, ஆதரவற்ற மற்றும் காயமடைந்த விலங்குகளுக்காக மாநிலம் முழுவதும் 6 விலங்குகள் நல காப்பகங்களை நிறுவி வருகிறது.

இந்த காப்பகங்களை மனிதாபிமான அடிப்படையில் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்திட ஏதுவாக, தகுதியும் அனுபவமும் வாய்ந்த அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், விலங்குகள் நல அமைப்புகள் ஆகியவற்றிடம் இருந்து, காப்பகங்களின் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஏதுவாக தகுதியுடைய நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் (Expression of Willingness) வரவேற்கப்படுகிறது.

விரிவான தகவல் மற்றும் விண்ணப்ப படிவம் வாரியத்தின் www.tnawb.tn.gov.in அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தேவையான இணைப்புகள் 10.3.2026 அன்று அல்லது அதற்கு முன் அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.



பழனியில் அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் எம்பி குமாரசாமி, முன்னாள் எம்எல்ஏ வேணுகோபாலு, எம்ஜிஆர் இளைஞர் அணி இணை செயலாளர் ரவி மனோகரன், நகர செயலாளர் முருகானந்தம், மாவட்ட இளைஞரணி செயலாளர் அன்வர்தீன், ஒன்றிய செயலாளர்கள் முத்துச்சாமி, மாரியப்பன், பேரூர் செயலாளர்கள் சக்திவேல், விஜயசேகரன், சசிகுமார் ஆகியோர் பங்கேற்றனர்

# தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு மேலும் 2 தகவல் ஆணையர்கள் நியமனம்!

சென்னை, பிப். 25–

தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு மேலும் 2 தகவல் ஆணையர்கள் நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு உள்ளது. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையர் (SCIC) ஆக Md. ஷகீல் அக்தர், IPS (ஓய்வு) இருந்து வருகிறார்.





அவருடன் மேலும், P. தாமரைக்கண்ணன், IPS (ஓய்வு), R. பிரியகுமார், B.Sc., B.L., டாக்டர் K. திருமலைமுத்து, ICLS (ஓய்வு), டாக்டர் R. பிரதாப்குமார், M. நடேசன் & திரு. V.P.R. எலம்பரிதி ஆகியோர் தகவல் ஆணையர்களாக இருந்து வருகின்றனர். இந்த நிலையில், மேலும் 2 தகவல் ஆணையர்கள் நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு உள்ளது.

அதன்படி, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்ய மிஸ்ரா, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோர் மாநில தகவல் ஆணையர்களாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் பதவியேற்ற நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு அந்தப் பொறுப்பில் பணியாற்றுவார்கள் என்றும் தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# EPFO விதிகளில் முக்கிய மாற்றங்கள்... விரைவில் புதிய திட்டம்..!

புதுடெல்லி, பிப். 25–

ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) மற்றொரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. மத்திய அரசு ஊழியர்களின் EPF பணத்தை வெவ்வேறு இடங்களில் முதலீடு செய்வதன் மூலம் வருமானம் ஈட்டி வருகிறது. இருப்பினும், இனிமேல், EPFO தனது முதலீட்டு கொள்கையை மாற்ற முடிவு செய்துள்ளது. மீதமுள்ள வருமானத்தை ETFகளில் முதலீடு செய்யும்.




இது ஒவ்வொரு மாதமும் இப்படி முதலீடு செய்யும் அதே வேளையில், இனிமேல் அது வருடத்திற்கு ஒரு முறை முதலீடு செய்யும். EPFO தற்போது 5 திட்டங்கள் மூலம் தனித்தனி கணக்குகளிலிருந்து முதலீடு செய்யும் அதே வேளையில், இனிமேல் அது ஒற்றை பூல் திட்டத்தைப் பின்பற்றும். அதாவது, ஐந்து திட்டங்களிலிருந்து பணத்தை ஒரே கணக்கில் சேகரித்து வருடத்திற்கு ஒரு முறை முதலீடு செய்யும்.

EPF மூலம் ETFகளில் முதலீடு செய்யும் செயல்முறையை ஒழுங்குபடுத்தவும் எளிமைப்படுத்தவும், ஒரு செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, வருடத்திற்கு ஒரு முறை ஒரு கணக்கிலிருந்து ET–Fகளில் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. முதலீட்டுக் குழு ஏற்கனவே இந்த முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டம் மார்ச் 2 ஆம் தேதி நடைபெறும் மத்திய அறங்காவலர் குழு கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

அறங்காவலர் உறுப்பினர்கள் அதை ஆராய்ந்து ஒப்புதல் அளிப்பார்கள். ETFகளில் முதலீடு செய்வதற்கான ஒரு நிலையான செயல்பாட்டு நடைமுறை வகுக்கப்படும். இது கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. 2015 முதல், மீதமுள்ள வருமானம் ET–Fகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 5 முதல் 15 சதவீதம் பணம் அதில் முதலீடு செய்யப்படுகிறது. ETF முதலீடுகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த அமைப்பை அறிமுகப்படுத்த இப்போது தயாராகி வருகிறது. இது ரூ.25 கோடிக்கு மேல் வழங்குநர்களுடன் மட்டுமே பரிவர்த்தனைகளை இயக்க வேண்டும் என்ற பங்குச் சந்தை ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவை EPFO பின்பற்ற உதவும்.

2016 முதல் நடைமுறையில் உள்ள நிலையான இயக்க நடைமுறை (SOP) படி திட்டம் வாரியான முதலீட்டுக் கொள்கை செயல்படுத்தப்படுகிறது. இருப்பினும், இனிமேல் வருடாந்திர முதலீடுகளுக்கு மாற EPFO திட்டமிட்டுள்ளது. ETF முதலீடுகளுக்கான முறையான முதலீட்டுத் திட்டக் கணக்கீடுகள் 20 முதல் 19 ஆம் தேதி வரையிலான தற்போதைய மாதாந்திர சுழற்சியை தேவையற்றதாக மாற்றும்.

ஒப்பந்தச் சீட்டுகள் மற்றும் ETF மீட்புகள் மற்றும் எல்லா நேரங்களிலும் சந்தை பங்கேற்பை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதிசெய்ய தெளிவாக வரையறுக்கப்பட்ட காலக்கெடுவை செயல்படுத்த புதிய முடிவுகள் உதவும் என்று EPFO தெளிவுபடுத்தியுள்ளது. இருப்பினும், மார்ச் 2 ஆம் தேதி நடைபெறும் கூட்டத்தில் EPFO இன் வருடாந்திர வட்டி விகிதத்தை நிர்ணயிக்கும் திட்டம் எதுவும் இல்லை.

# விஜய் போட்ட பிளான் தோல்வி..! பின்னடைவை சந்திக்கும் தவெக..!!

சென்னை, பிப். 25–

தமிழக அரசியல் களத்தில் 'தமிழக வெற்றிக்கழகம்' என்ற புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள நடிகர் விஜய், 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள தீவிரமான வியூகங்களை வகுத்து வருகிறார். இருப்பினும், கள நிலவரம் அவர் எதிர்பார்த்தபடி அமையவில்லை என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். குறிப்பாக, மற்ற கட்சிகளில் உள்ள சீனியர் தலைவர்கள் மற்றும் மக்கள் செல்வாக்குமிக்க முகங்களை தனது பக்கம் ஈர்க்க விஜய் மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை பெரிய அளவில் கைகொடுக்கவில்லை என்பது அக்கட்சியின் தலைமைக்குச் சற்று பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.



திமுக மற்றும் அதிமுக ஆகிய இரு பெரும் துருவங்களும் தங்களது கூட்டணிகளை இறுதி செய்து, தொகுதிப் பங்கீடு மற்றும் தேர்தல் பணிகளில் மின்னல் வேகத்தில் முன்னேறி வருகின்றன. தவெக–வுடன் கைகோர்க்கும் என எதிர்பார்க்கப்பட்ட பாமக மற்றும் தேமுதிக போன்ற முக்கியக் கட்சிகள், ஏற்கனவே இருக்கும் பெரும் கூட்டணிகளிலேயே தஞ்சம் புகுந்துவிட்டன. இதனால், தற்போதுள்ள அரசியல் சூழலில் தவெக தனித்து விடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. குறைந்தபட்சம் மற்ற கட்சிகளில் அதிருப்தியில் இருக்கும் மூத்த நிர்வாகிகளையாவது தவெக–வுக்கு இழுக்க வேண்டும் என தனது கட்சி நிர்வாகிகளுக்கு விஜய் வழங்கிய அசைன்மென்ட் இதுவரை எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை.

முன்னாள் அமைச்சர்களின் வாரிசுகள் மற்றும் சில இரண்டாம் கட்ட தலைவர்கள் மட்டுமே கட்சியில் இணைந்து வருவதால், தேர்தல் களத்தில் பலமான ஆளுமை இல்லாதது விஜய்யை தீவிர யோசனையில் ஆழ்த்தியுள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக, மதுரையில் முன்னாள் மத்திய அமைச்சர் அழகிரியின் ஆதரவாளர்களை தன் பக்கம் இழுக்க தவெக நிர்வாகிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், அதிமுகவின் செல்லூர் ராஜு இதில் லாவகமாக செயல்பட்டு அந்த நிர்வாகிகளை தனது பக்கம் ஈர்த்துக் கொண்டது தவெக தலைமைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், குறிப்பிடத்தக்க அரசியல் ஆளுமைகள் யாரும் இதுவரை இணையாதது அக்கட்சித் தொண்டர்களிடையே ஒருவித கலக்கத்தை உண்டாக்கியுள்ளது. இதற்கிடையே, கட்சி நிர்வாகிகளுடன் பேசுவதை சற்று குறைத்துக் கொண்டுள்ள விஜய், தனது தேர்தல் வியூகங்களை முற்றிலும் மாற்றியமைக்க ரகசியத் திட்டமிட்டு வருவதாக தகவல்கள் கசிகின்றன. 2026 தேர்தல் போர்க்களத்தில் விஜய்யின் இந்த அடுத்தகட்ட நகர்வு எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## பெடரல் பேங்க் காலியிடங்கள்

நிறுவனத்தின் பெயர்: ஃபெடரல் வங்கி
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
பெயர் பதவிகள்: இணை அதிகாரி (விற்பனை) பதவிகள்
பணியிட இடம்: இந்தியா முழுவதும்
தொடக்க தேதி: 20.02.2026
கடைசி தேதி: 04.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.federal.bank.in/careers

## ரிசர்வ் வங்கியில் 650 உதவியாளர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

வங்கிகளின் மத்திய வங்கியான இந்திய ரிசர்வ் வங்கியில் (ஆர்பிஐ) காலியாக உள்ள 650 உதவியாளர் பதவிகளுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பணி: உதவியாளர் காலியிடங்கள்: 650

சம்பளம்: மாதம் ரூ.58,514

தகுதி: 1.2.2026 தேதியின்படி ஏதாவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 1.2.2026 தேதியின்படி 20 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும். அதாவது 2.2.1998–க்கு முன்போ, 1.2.2006–க்கு பின்போ பிறந்தவர்களாக இருக்க கூடாது. அரசு விதிமுறைகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் வயது தளர்வு வழங்கப்படும். மாற்றுத்திறன் பிரிவினர்களுக்கு 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, அதைத் தொடர்ந்து மொழித் திறன் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். வினாத்தாள் ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழில் அமைந்திருக்கும்.

தமிழ்நாட்டில் தேர்வு நடைபெறும் இடம்: முதல்நிலைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, நாமக்கல், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, விருதுநகர், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, திருப்பூர், தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் புதுச்சேரி

முதன்மைத் தேர்வு மையம்: சென்னை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர், மதுரை, சேலம் மற்றும் புதுச்சேரி.

தேர்வு நடைபெறும் நாள்: தோராயமாக முதல்நிலைத் தேர்வு ஏப்ரல் 11, முதன்மைத் தேர்வு ஜூன் 7 ஆம் தேதி நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை: www.rbi.org.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப் பதற்கான கடைசி நாள்: 8.3.2026

## எலக்ட்ரானிக்ஸ் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி – 29 காலியிடங்கள்

நிறுவனத்தின் பெயர்: சமீர் – பயன்பாட்டு மைக்ரோவேவ் எலக்ட்ரானிக்ஸ் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி சங்கம்
அறிவிப்பு எண்: S–CEM/ESTT/PE–PA–PT/01/2026
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 29 திட்ட தொழில்நுட்ப உதவியாளர், திட்ட அறிவியல் உதவியாளர், திட்ட பொறியாளர் மற்றும் மூத்த திட்ட பொறியாளர் பதவிகள்
வேலை செய்யும் இடம்: சென்னை
நேர்காணல் தேதி: 09.03.2026 & 10.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://sameer.gov.in/chennai/recruitment

## தாட்கோ வழங்கும் விமானத் துறை சார்ந்த பயிற்சி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு விமான முன்பதிவு ஆளுமை மற்றும் கேபின்குழு பணியாளர் உள்ளிட்ட பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, விமான முன்பதிவு ஆளுமை மற்றும் கேபின் குழு பணியாளர் பயிற்சி வழங்கப்பட உள்ளது. பயிற்சி காலம் 3 மாதங்கள்.

இதில், விமான டிக்கெட் முன்பதிவு முறை, வாடிக்கையாளர் சேவை, தொடர்புத் திறன், ஆளுமை மேம்பாடு, விமான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் கேபின் குழு பணிகள் குறித்து தொழில்முறை பயிற்சி வழங்கப்படும். இந்தப் பயிற்சி திருப்பூர் மாவட்டத்தில் அளிக்கப்பட உள்ளது. இந்தப் பயிற்சியை முழுமையாக முடித்த இளைஞர்களுக்கு சான்று மற்றும் தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்யப்படும். இதில் பயிற்சி பெற தாட்கோ இணையதளத்தில் (www.tahdco.com) விண்ணப்பிக்காலம். மேலும், திருப்பூரில் உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி மற்றும் உணவுக்கான செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய ராணுவ சட்ட பட்டதாரிகளுக்கான *jak* தேர்வு

இந்திய ராணுவ சட்ட பட்டதாரி களுக்கான *jak* தேர்வு எழுத LLB யில் 55 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றோர் *27–2–2026* (வருகிற வெள்ளிக்கிழமை கடைசி நாள்)*.வரை 'https://joinindianarmy.nic.in/' என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். சமூக மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.



# சிறுமிகளுக்கு இலவச கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டம்: மத்திய அரசு விரைவில் தொடக்கம்!




புதுடெல்லி, பிப். 25–

14 வயதுக்குள்பட்ட சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோயக்கான இலவச தடுப்பூசி திட்டத்தை மத்திய அரசு விரைவில் தொடங்க வுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

இத்திட்டத்தின்கீழ் சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய 'ஹியூமன் பாப்பிலோமா வைரஸ்' (ஹெச்பிவி) வகைகள் 16, 18 மற்றும் வகைகள் 6, 11–இல் இருந்து பாதுகாக்கும் 'கார்டசில்' என்ற தடுப்பூசி ஒருமுறை மட்டுமே செலுத்தப்படவுள்ளது. இதுகுறித்து அதிகாரபூர்வ வட்டாரங்கள் மேலும் கூறியதாவது: 14 வயதுக்குள்பட்ட சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய்க்கான இலவச தடுப்பூசி திட்டத்தை மத்திய அரசு விரைவில் தொடங்கவுள்ளது. வெளிச்சந்தைகளில் 15 வயதுக்குள்பட்ட சிறுமிகளுக்கு கார்டசில்–4 தடுப்பூசி ரூ.3,927–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த தடுப்பூசியை இரண்டு முறை செலுத்த வேண்டும். 15 வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளாக இருப்பின் மூன்று முறை செலுத்த வேண்டும்.

இந்நிலையில், நாடு முழுவதும் மத்திய அரசு அறிமுகப்படுத்தவுள்ள கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தில் ஒருமுறை மட்டுமே செலுத்தக்கூடிய கார்டசில் இலவசமாக அளிக்கப்படுகிறது.


14 வயதிலேயே சிறுமிகளுக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்படுவதால் அவர்கள் எதிர்காலத்தில் கருப்பை வாய் புற்றுநோயால் பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது.

160 நாடுகளில் அமல்:

ஏற்கெனவே 160 நாடுகள் ஹெச்பிவி தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தி வரும் நிலையில், அந்நாடுகளுடன் இந்தியாவும் இணையவுள்ளது. இதில் 90–க்கும் மேற்பட்ட நாடுகள் ஒரு முறை மட்டுமே செலுத்தக்கூடிய ஹெச்பிவி தடுப்பூசி திட்டத்தை அமல்படுத்தியுள்ளன எனத் தெரிவித்தன.

இந்தியாவில் ஆண்டுதோறும் 80,000 பேர் கருப்பை வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 42,000 உயிரிழக்கின்றனர். இந்தியாவில் முதல்முறையாக 14 வயதுக்குள்பட்ட சிறுமிகளுக்கு இலவச ஹெச்பிவி தடுப்பூசி திட்டம் தமிழ்நாட்டில் கடந்த ஜனவரி 27–ஆம் தேதி தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மேற்கு வங்க இறுதிப் பட்டியலில் வாக்காளர்களை சேர்க்க சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் உத்தரவு!




புதுடெல்லி, பிப். 25–

மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகள் சார்ந்த கோரிக்கை, ஆட்சேபனை மனுக்களை பரிசீலிக்க மாவட்ட நீதிசார் அலுவலர்களை நியமித்து கடந்த 20ம் தேதி உத்தரவிட்டது.

மேற்கு வங்க அரசுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையே ஏற்பட்ட நம்பிக்கையற்ற நிலையில் இந்த ஏற்பாட்டை செய்துள்ளதாக தெளிவுபடுத்தியது. கூடுதலாக ஜார்க்கண்ட், ஒடிசா நீதிசார் அலுவலர்களை நியமித்துக் கொள்ளவும் அனுமதி வழங்கியது.

இது தொடர்பாக ஜார்க்கண்ட், ஒடிசா உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளிடம் கேட்டு பெறவும், இவ்வாறு நியமிக்கப்படும் மாவட்ட நீதிசார் அலுவலர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்கான செலவினங்களை தேர்தல் ஆணையமே ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்தது. மேற்கு வங்க எஸ்ஐஆர் வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகள் சார்ந்து பிப்.14–க்கு முன் பெறப்பட்ட கோரிக்கை, ஆட்சேபனை மனுக்களை பரிசீலிக்க வேண்டும். வாக்காளர் இறுதிப் பட்டியலை பிப்.28ல் வெளியிட வேண்டும் என்றும், மேலும் துணை பட்டியலில் இடம்பெறும் வாக்காளர்களின் பெயர்கள் இறுதி பட்டியலில் இடம்பெறும் என்று தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கச்சத்தீவு திருவிழா: மீனவர்கள் 5 நாட்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல தடை!



சென்னை, பிப். 25–

கச்சத்தீவு அந்தோணியார் ஆலய திருவிழா பிப்ரவரி 27, 28 (2026) ஆகிய நாட்களில் நடைபெறுவதையொட்டி, தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 3,996 பக்தர்கள், 118 படகுகளில் (75–92 விசைப்படகுகள், 26 நாட்டு ப்படகுகள்) புனித பயணம் மேற்கொள்ள பதிவு செய்து ள்ளனர். இந்ததிருவிழா வுக்கான கொடியேற்றம் 27ந்தேதி நடைபெறுகிறது. தொடர்ந்து இரு நாட்கள் விழா நடைபெற உள்ளது. இதில், தமிழகம் மற்றும் இலங்கையை சேர்ந்த மீனவர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இந்த திருவிழா இந்தியா–இலங்கை இருநாட்டு நல்லுறவை மேம்படுத்தும் வகையில் நடைபெறுகிறது.

கச்சத்தீவு விழாவில் கலந்து கொள்ள ராமேசுவரம் துறைமுகத்திலிருந்து 27–ம் தேதி காலை படகுகள் புறப்படுகின்றன.

இதற்காக 75 விசைப்படகுகளும் 26 நாட்டுப்படகுகளும் என மொத்தம் 101 படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த படகுகளில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் செல்ல உள்ளனர். இந்தநிலையில் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவிற்கு செல்லும் நாட்டுப்படகுகளை மீன்வளத்துறை துணை இயக்குனர் சின்ன குப்பன் தலைமையில் ராமேசுவரம் உதவி இயக்குனர் தமிழ்மாறன், மண்டபம் இயக்குனர் சிவக்குமார் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். இந்தநிலையில் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவிற்கு செல்லும் நாட்டுப்படகுளை மீன்வளத்துறை துணை இயக்குனர் சின்ன குப்பன் தலைமையில் ராமேசுவரம் உதவி இயக்குனர் தமிழ்மாறன், மண்டபம் இயக்குனர் சிவக்குமார் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது படகின் உறுதித்தன்மை, என்ஜின் தரம் குறித்து ஆய்வு செய்தனர். இதேபோல் ராமேசுவரம் துறைமுக பகுதியில் விசைப்படகு களையும் ஆய்வு செய்தனர். இதையடுத்ரது, கச்சத்தீவு அந்தோணியார் ஆலய திருவிழாவை முன்னிட்டு இன்று முதல் 1–ந்தேதி வரை 5 நாட்கள் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தங்கச்சி மடம், தனுஷ்கோடி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகள் மீன்பிடிக்க செல்லக்கூடாது என்று மீன்வளத்துறை அதிகாரிகள் தடை விதித்து உள்ளனர்.

# இந்தியா - பாக். போரில் நான் இல்லையென்றால் 3.5 கோடி மக்கள் இறந்திருப்பர்: டிரம்ப்!



அமெரிக்கா, பிப். 25–

இந்தியா – பாகிஸ்தான் போரை நிறுத்தாமலிருந்திருந்தால், 35 மில்லியன் மக்கள் இறந்திருக்கக் கூடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பேசியுள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் அதிபர் டிரம்ப் பேசுகையில், "உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அமெரிக்கர்களின் பாதுகாப்பை நாங்கள் பெருமையுடன் மீட்டெடுத்து வருகிறோம். எனது முதல் 10 மாத பதவிக்காலத்தில் 8 போர்களை நிறுத்தியுள்ளேன். இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுதப் போரை நடத்தியிருக்கும். இந்தியா – பாகிஸ்தான் போரில் என்னுடைய தலையீடு இல்லாமலிருந்திருந்தால், 35 மில்லியன் மக்கள் இறந்திருப்பர் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் கூறினார்.

ஒன்பதாவது போரை முடிவுக்குக் கொண்டுவர எனது நிர்வாகம் மிகவும் கடினமாக உழைத்து வருகிறது. ரஷியா – உக்ரைன் இடையிலான படுகொலை, நான் அதிபராக இருந்திருந்தால் ஒருபோதும் நடந்திருக்காது" என்று தெரிவித்தார்.

இந்தியா – பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக டிரம்ப் சுமார் 80–க்கும் அதிகமான முறை கூறிவிட்டார். இருப்பினும், டிரம்ப்பின் பேச்சை மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. இருநாடுகளிடையேயான நேரடிப் பேச்சுவார்த்தை மூலமே போர் நிறுத்தப்பட்டதாக மத்திய அரசு கூறுகிறது.

# மார்ச் 1 முதல் காலவரையற்ற ஸ்டிரைக்; ரேஷன் கடை ஊழியர்கள் சங்கம் அறிவிப்பு!




புதுடெல்லி, பிப். 25–

ஊதிய மாற்றக் குழுவின் பரிந்துரையை உடனே அமல்படுத்த வேண்டும் என்பது உள்பட 15 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, மார்ச் 1ம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ரேஷன் கடை ஊழியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சட்டசபை தேர்தல் நெருங்குவதை முன்னிட்டு, பல்வேறு சங்கத்தினரும் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அடங்கிய ஜாக்டோ ஜியோ சங்கத்தினரின் சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளித்த அரசு, அவர்களது போராட்டத்தை முடித்து வைத்துள்ளது.

தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாத சில சங்கத்தினர், இன்னும் தொடர்ந்து போராடி வருகின்றனர். ரேஷன் கடை ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் ஜெயச்சந்திர ராஜா கூறியதாவது;நுகர்பொருள் வாணிப கழக கிடங்கில் உள்ள எடை தராசும், ரேஷன் கடையில் உள்ள விற்பனை முனையத்தையும் இணைத்து அதனடிப்படையில் சரியான எடையில் தரமான பொருட்களை பொட்டலமாக வழங்க வேண்டும். தமிழக அரசு ஐ.ஏ.எஸ்., தலைமையில் அமைத்த ஊதிய மாற்ற கமிட்டி பரிந்துரையை உடனே வெளியிட்டு எங்களுக்கு இளநிலை உதவியாளர் சம்பளம் ரூ.19 ஆயிரத்து 500தரக் கோரிக்கை வைத்துள்ளோம். பிளஸ் 2 கல்வித் தகுதி அடிப்படையில் பணிபுரிகிறோம். அதே போல் எடையாளருக்கு அலுவலக உதவியாளர் சம்பளம் தர வேண்டும். பொது வினியோக திட்டத்தை தனித் துறையாக அறிவிக்க வேண்டும். ரேஷன் கடைகளில் கழிப்பறை வசதியின்றி ஊழியர்கள் திண்டாடுகின்றனர். கழிப்பறை கட்டித்தரப்படும் என்ற வாக்குறுதி அப்படியே உள்ளது. முதற்கட்டமாக மாற்றுத்திறனாளி, பெண் ஊழியர்களுக்காவது அதனை கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்ய வேண்டும். பணிவரன் முறைப்படுத்தாத பணியில் இருக்கும் போது இறந்த ரேஷன் கடை பணியாளர் வாரிசுகளுக்கு வேலை வழங்க வேண்டும்.

தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடு வீடாக பொருட்கள் வழங்கும் திட்டத்திற்கு ரேஷன் கார்டு எண்ணிக்கைக்கு ஏற்ப தொகை வழங்காமல் எடையாளர் ஊதியம், ஏற்று கூலி, இறக்கு கூலி, மினி லாரி வாடகை ரேஷன் கடை பணியாளருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும். இக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மார்ச் 1 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடத்தப்பட உள்ளது, என்றார்.

# திமுக - காங்கிரஸ் இடையே தொகுதி பங்கீட்டில் இழுபறி: தவெகவுடன் கைகோர்க்க திட்டமா?



சென்னை, பிப். 25–

தமிழகத்தில் கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளில் போட்டியிட்டு 18–ல் வெற்றி பெற்றது.

இந்த முறை 41 தொகுதிகளையும், 2 ராஜ்ய சபா சீட்டையும் கேட்டுவருகிறது. ஆரம்பத்தில், ஆட்சியில் பங்கு என்ற கோஷத்தையும் காங்கிரஸ் கட்சி கூடுதலாக முன்வைத்தது. ஆனால், திமுக தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியதால், கடைசி நேரத்தில் பின்னாங்கியது. என்றாலும், நீருபூத்த நெருப்பாக இன்னும் ஆட்சியில் பங்கு என்ற கோஷம் புகைந்து கொண்டேதான் இருக்கிறது.

சமீபத்தில் சென்னை வந்த காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட் வேண்டும் என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நேரில் வலியுறுத்தினார்.

ஆனால், அவரிடம் இருந்து சாதகமான பதில் வராததால், எந்த முடிவும் எட்டப்படாத நிலையில் அவர் டெல்லி திரும்பினார். அதையடுத்து தமிழகம் வந்த காங்கிரஸ் கட்சி பொறுப்பாளர் கிரீஷ் ஷோடங்கர், திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி.யை சந்தித்து பேசினார். அப்போது, கே.சி.வேணுகோபால் வைத்த கோரிக்கையையே மீண்டும் வைத்தார்.

ஆனால், கனிமொழி தரப்பிலோ, 27 தொகுதிகளும், ஒரு ராஜ்ய சபா சீட்டும் தர முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்வந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், காங்கிரஸ் கட்சியோ, குறைந்தது 35 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட் வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

திமுக தரப்பிலோ, 'முடியாது' என கைவிரிக்கப்பட்டுவிட்டது. காங்கிரஸ் கட்சிக்கும் இதுதான் கடைசி வாய்ப்பு என்றும் தெரிவிக்கப்பட்டுவிட்ட தாம். அதனால், திமுக கொடுப்பதை வாங்கிக்கொண்டு, காங்கிரஸ் கட்சி தேர்தலை சந்திக்குமா?, அல்லது கட்சி நிர்வாகிகள் பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பான தவெகவுடன் கைகோர்க்குமா? என்பது அடுத்தக்கட்ட நகர்வில்தான் தெரியவரும்.

# யாருடன் கூட்டணி? ராமதாஸ் பிப். 26-ல் முடிவு!



சென்னை, பிப். 25–

பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'பா.ம.க., வன்னியர் சங்கம் உள்ளிட்ட சார்பு அமைப்புகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கும் கூட்டம், நாளை காலை 10:00 மணிக்கு, திண்டிவனம், தைலாபுரம் தோட்டத்தில் என் தலைமையில் நடக்கவுள்ளது.

'அதில், தேர்தல் குறித்து ஆலோசிக்கப்படும்' என கூறியுள்ளார். பா.ம.க., நிறுவனர் ராமதாசும், அவரது மகனும் கட்சியின் தலைவருமான அன்புமணியும் தனித்தனியாக செயல்பட்டு வருகின்றனர். அ.தி.மு.க., –– பா.ஜ., கூட்டணியில் அன்புமணி இணைந்துள்ளார். ஆனால், ராமதாஸ் தரப்பு பா.ம.க.,வால், எந்தக் கூட்டணியிலும் சேர முடியாத நிலை உள்ளது. இந்நிலையில், நாளை நடைபெறும் கூட்டத்திற்குப் பின், கூட்டணி குறித்து முக்கிய அறிவிப்பை, ராமதாஸ் வெளியிடுவார் என, அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தல் வழக்கில் 9 பேர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்த வழக்கு தள்ளுபடி!



சென்னை. பிப். 25–

கன்னட நடிகர் ராஜ்குமார் கட த்தல் வழக்கில் 9 பேர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 9 பேர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து காவல்துறை தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு ஐகோர்ட்டில் தள்ளுபடி. மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து விடுதலையை உறுதி செய்தது சென்னை உயர்நீதிமன்றம். 2000ம் ஆண்டு ஜூலை மாதம் ஈரோடு மாவட்டம் தாளவாடி பண்ணை வீட்டில் இருந்த ராஜ்குமார் கடத்தப்பட்டார்.

# மலை உச்சியில் நடைபெறும் விஜய் தேவரகொண்டா –ராஷ்மிகா திருமணம்!



நடிகர் விஜய்தேவரகொண்டா –ராஷ்மிகா காதல் திருமணம் நாளை உதய்ப்பூரில் நடக்கிறது. நெருங்கிய உறவினர்கள் 100 பேர் மட்டும் பங்கேற்கும் இந்த திருமண விழா உதய்ப்பூர் நகரத்தில் இருந்து சுமார் 30 கி.மீட்டர் தொலைவில் ஆரவல்லி மலை உச்சியில் அமைந்துள்ள ஐ.டி.சி. மெமென்டோஸ் ரிசார்ட்டில் நடைபெறுகிறது.

மலைப் பகுதியில் விரிவான தோட்டங்களுக்கு மத்தியில் உள்ள இந்த ஆடம்பர ரிசார்ட் தனியுரிமைக்கு பெயர் பெற்றது. இதில் 117 அறைகள் உள்ளன. சுமார் 3 ஆயிரம் பேர் தங்கலாம். இந்த ஓட்டல் ஆடம்பர நிகழ்ச்சிக்கு பெயர் பெற்றது.

திருமணத்திற்காக விஜய் தேவரகொண்டா– ராஷ்மிகா குடும்பத்துடன் சில தினங்களுக்கு முன்பு ஐதராபாத்தில் இருந்து உதய்ப்பூர் புறப்பட்டு சென்றனர். திருமணத்திற்கு முந்தைய கொண்டாட்டங்கள் நேற்று முதல் தொடங்கியது. இன்று ஹல்டி மற்றும் சங்கீத் விழாக்கள் நடைபெறுகிறது.

நாளை குடும்பத்தினர், நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் இருவரது திருமணமும் நடைபெறுகிறது. ஆண்டுக்கணக்கில் காதலில் ரகசியத்தை காத்தது போல் திருமண விழாவிலும் ரகசியம் காக்கின்றனர் விஜய் தேவரகொண்டா–ராஷ்மிகா.

# வீடுகளில் முதியோர் இறந்தால் காரணம் சொல்வது இனி கட்டாயம்!




சென்னை, பிப். 25–

பொது சுகாதாரத் துறை இயக்குநர் சோமசுந்தரம் கூறியதாவது: உலக சுகாதார நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து, கரூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில், வீடுகளில் இறந்தவர்களின் விபரங்கள் அடிப்படையில், இறப்புக்கான உண்மையான காரணம் கண்டறியப்பட்டது. அதன்படி, 98 சதவீதம் இறப்புக்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளது. அதிகபட்சமாக, 20 சதவீதம் பேர் வரை இதய நோயாலும், 7 சதவீதம் பேர் நீரிழிவு உள்ளிட்ட நோய்களால் இறந்துள்ளது தெரியவந்துள்ளது. ஆனால், அவர்களின் இறப்புக்கான காரணமாக, வயது மூப்பு என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர், திருநெல்வேலி உட்பட, 10 மாவட்டங்களிலும், இதேபோன்று ஆய்வு செய்யப்படும்.

தொடர்ந்து மாநிலம் முழுதும் இது விரிவுப்படுத்தப்படும். எதிர்வரும் காலங்களில், வீடுகளில் இறந்திருந்தாலும், இறப்புக்கான காரணத்தை டாக்டர் வாயிலாக உறுதி செய்து, சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்படும். தற்போது, இறப்புகளை முறையாக பதிவு செய்யும்படி, அனைத்து சுகாதார அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டு ள்ளது. இந்த புள்ளிவிபரங்கள் இருந்தால் தான், ஒரு பகுதியில் அதிகப்படியாக இறப்புக்கான காரணத்தை கண்டறிந்து, அங்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

# தங்கம் விலை தொடர்ந்து உயர்வு!



சென்னை, பிப். 25–

கடந்த இரு தினங்களாக உயர்ந்து காணப்பட்டு வந்த தங்கத்தின் விலை இன்றும் அதிகரித்துள்ளது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு 320 ரூபாய் உயர்ந்து, ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 440 ரூபாயிக்கு விற்பனையாகி வருகிறது. கிராமுக்கு 40 ரூபாய் அதிகரித்து 14 ஆயிரத்து 930க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் கடந்த 3 தினங்களில் மட்டும் 2 ஆயிரம் ரூபாய் உயர்ந்துள்ளது.

தங்கத்தைப் போல வெள்ளி விலையும் அதிகரித்துள்ளது. கிராமுக்கு 5 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 295 ரூபாய்க்கும், வெள்ளி கிலோவுக்கு 5 ஆயிரம் உயர்ந்து, 2 லட்சத்து 95 ஆயிரத்துக்கும் விற்பனையாகி வருகிறது.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020